


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (19.01.2017) நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண் : 48/2017 நாள்: 19.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (19.01.2017) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் இன்று (19.01.2017) நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 17.01.2017 அன்று பேச்சிப்பாறை அணையின் நீர்மட்ட இருப்பு 8.30 அடியும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்ட இருப்பு 16.50 அடியும், சிற்றார்-1 அணையின் நீர்மட்ட இருப்பு 4.53 அடியும், சிற்றார்-2 அணையின் நீர்மட்ட இருப்பு 4.63 அடியும், பொய்கை அணையின் நீர்மட்ட இருப்பு 8.00 அடியும், மாம்பழத்துறையாறு நீர் மட்ட இருப்பு 34.45 அடியும் உள்ளது.

12.01.2017 அன்று வரை வேளாண் விரிவாக்க மையம் மூலம் 245.545 (மெ.டன்) பரப்பில் நெல் பயிறு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 01.04.2016 முதல் 12.01.2017 முடிய 19,533 நெட்டை ரக தென்னங்கன்றுகளும், 18,941 நெட்டை குட்டை ரக தென்னங்கன்றுகளும், 1,063 குட்டை நெட்டை ரக தென்னங்கன்றுகளும் ஆக மொத்தம் 39,537 தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தடையின்றி உரம் விநியோகிப்பதற்காக டான்பெட் நிறுவனத்தில் 541 மெட்ரிக் டன்னும், கூட்டுறவு சங்கங்களில் 2,203 மெட்ரிக் டன்னும், தனியார் விற்பனையாளர்களிடம் 614 மெட்ரிக் டன்னும் ஆக மொத்தம் 3,358 மெட்ரிக் டன் உரம் இருப்பில் உள்ளது என தெரிவிக்கப்பட்டது. பின்னர் கடந்த மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது பதில்கள் வாசிக்கப்பட்டது.

மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைஉறுதி திட்டத்தின்கீழ், பள்ளிகொண்டான் அணையிலிருந்து தண்ணீர் வரும் பள்ளிகொண்டான் கால்வாயில் பொதுப்பணித்துறை (நீர் ஆதரவு) மூலம் செடி,கொடிகள் அகற்றப்பட்டு கால்வாய் தூர்வாரி சரி செய்யப்பட்டுள்ளது எனவும், பொதுப்பணித்துறைக்கு சொந்தமான முக்காட்டுக்குளத்தில் குப்பைகள் கொட்டுவதை தடுப்பதற்காக தீவிரமாக ஆளூர் பேரூராட்சி மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் பேரூராட்சி பணியாளர்கள் வீடுகள் தோறும் குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறார்கள் எனவும், தற்பொழுது அணையின் நீர்மட்டம் மிக குறைந்த அளவில் உள்ளதால் சுழற்சி முறையில் தண்ணீர் பங்கீடு செய்து விநியோகிக்கப்படுகின்றது. சுழற்சி முறையில் தோவாளை கால்வாயில் தண்ணீர் விநியோகிக்கும் பொழுது, மருங்கூர் பெரிய குளத்திற்கு தண்ணீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், கல்லுக்கூட்டம் பேரூராட்சி சேரமங்கலம் மைனர் கால்வாயில் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணறு தற்போது இயக்க இயலாத நிலையில் உள்ளதால், காரியாவிளை, தறியன்விளை மற்றும் கூத்தாவிளை ஆகிய பகுதிகளுக்கு

மேல்நிலை நீர்த்தேக்க திட்டம் வாயிலாக தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பழுது நீக்கம் செய்ய மன்ற கூட்டத்தில் பொருள் சேர்க்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், நெல் விவசாயிகள் குழு செயல்பாடுகளை ஊக்குவிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், தெள்ளாந்தி குளத்திற்கு தோவாளை கால்வாய் மூலம் தண்ணீர் பெறும் பிலிப்பு மடை சரி செய்து, ஷட்டர் வரும் நிதியாண்டில் பராமரிப்பு ஒதுக்கீட்டின் அடிப்படையில் சரி செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், பேச்சிப்பாறை அணை தூர்வாருவது குறித்த திட்ட அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டவுடன், அணை தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், குளச்சல் கிராமத்திற்குட்பட்ட வெள்ளியாகுளத்தில் தண்ணீர் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், சிறக்குளம் சீர் செய்ய சுமார் ரூ.22 இலட்சம் செலவாகும். சிறப்பு நிதி ஏதேனும் கிடைக்கும் பட்சத்தில் குளத்தினை சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், முட்டம் நீட்சிப்புக் கால்வாய் வெள்ளமோடி அருகேயுள்ள 2 மதகுகள் பராமரிப்பு நிதியில் பணிகளின் முன்னுரிமை அடிப்படையில் சரி செய்யப்படும் எனவும், தென்னை மரங்களில் இளநீர் மற்றும் தேங்காய்களை பறித்து நாசம் செய்து வரும் மரநாய்கள் மற்றும் குரங்குகளை பிடித்து அப்புறப்படுத்த சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலருக்கு அறிவுரை வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ, இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு. இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், பொதுப்பணித்துறை (நீர் ஆதரவு) செயற்பொறியாளர் பொறி சுப்பிரமணியன், வட்டாட்சியர்கள், செயல் அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.